மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 508/2018 வா.சா.3 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. கண்ணன் | வயது | .. 70 |
| த/பெ. | .. அல்ராஜி | சாதி | .. |

28.09.2021 - வா.சா.3 குறுக்கு விசாரணை.

வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. அதனால் அந்த விவரங்கள் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தனாது ஆதியில் எனது தாய், தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாய், தந்தையர் இறந்த வருடம் எனக்கு படிக்கத்தெரியாது என்பதால் தெரியாது. எனது தாய், தந்தையருக்கு 4 மகன்கள். 1) கிருஷ்ணன், 2) நாராயணசாமி, 3) ஏழுமலை 4வது நான். கிருஷ்ணன் திருமணம் ஆகாமல் வாரிசு இல்லாமல் இறந்து விட்டார் என்றால் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். ஆனால் நாராயணசாமியின் மகன் ராஜேந்திரனை மகனாக வளர்த்து வந்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் ராஜேந்திரனை தத்து எடுத்ததற்கு ஆவணம் எதேனும் பதிவு செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் தத்து எடுத்து அவர் தான் வளர்த்து வந்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ராஜேந்திரன், கிருஷ்ணன் ஆகியோர் வாதிக்கு கிரைய அக்கிரிமெண்ட் எழுதிக்கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1992ல் ராஜேந்திரன் வாதியாகிய மணிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வீஸ் கனெக்ஷன்

எண்.84 வாங்கப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் 4 பேரும் சேர்ந்து தான் வாங்கினோம். எந்த வருடம் வாங்கினோம் என்றால் வருடம் எனக்குத் தெரியவில்லை. சர்வீஸ் கனெக்ஷன் பாகம் பிரிவதற்கு முன்பாகவே வாங்கப்பட்டு விட்டது. எந்த வருடம் என்று தெரியாது. பாகம் பிரிந்த பின்பு ஏழுமலை என்பவர் தான் தனிப்பட்ட முறையில் சர்வீஸ் கனெக்ஷன் வாங்கினார் என்றால் சரியல்ல. பாகம் பிரிப்பதற்கு முன்பாகவே 4 பேரும் சேர்ந்து தான் வாங்கினோம். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் பாகம் பிரிந்து பின்பு தான் சர்வீஸ் கனெக்ஷன் வாங்கப்பட்டது என்பதால் தான் ராஜேந்திரன் என்பவர் எழுதிக்கொடுத்ததாக எங்களால் சொல்லப்படும் வா.சா.ஆ. 6ல் மின் இணைப்பு சம்பந்தமாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 1990ல் எங்களுக்குள் பாகம் பிரிந்து விட்டது என்றாலும் 1991ல் ஏழுமலை என்பவர் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு பெற்றார் என்றால் சரியல்ல. எனது தாயரான தனபதி அம்மாளின் சொத்தை விற்றும், மேலும் தேவைப்பட்ட தொகைக்கு நாங்கள் நால்வரும் பங்கிட்டு கொடுத்து அதன் படி தான் மின் இணைப்பு பெற்றோம். கிருஷ்ணமூர்த்திக்கு நான் கிரையம் கொடுத்துள்ளேன். வா.சா.1 தனது முதல் விசாரணையில் நான் எனது பங்கை காட்டிலும் 5 சென்ட்டை கூடுதலாக கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது சரியா என்றால் எனது பங்கு 80 சென்ட் தான் அதற்கு கூடுதலாக கிரையம் கொடுத்திருந்தால் அது தவறு. நான் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் வாரிசு இல்லாமல் இறந்து விட்டதால் அவரது பாகம் எனக்கும், எனது சகோதரர் ஏழுமலை என்பவருக்கும் கிடைக்கப்பெற்று அதன்படி தான் வா.சா.ஆ.11 மற்றும் 12ன் படி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் கொடுத்த பிறகு கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவரது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அதன் பிறகு கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து இவ்வழக்கின் பிரதிவாதி பாண்டுரங்கன் என்பவர் கிரையம் பெற்று அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதே போல் சர்வீஸ் எண் 84ஐ ஏழுமலை என்பவர்

கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் 4 பேருக்கு சொந்தமானதை அவர் மட்டும் கிரையம் கொடுக்க முடியாது. கிரையம் கொடுத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது சர்வீஸ் எண்.84ஐ பாண்டுரங்கன் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி பயிர் வைக்காததால் பாண்டுரங்கன் அனுபவித்து வருகிறார். நான் கிரையம் கொடுத்து விட்டு அந்த கிரையப்பத்திரத்திற்கெதிராக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.